நூல்

# அறத்துப்பால்

கடவுள் வாழ்த்து(1வது குறள்)

மூதுரை வள்ளுவர் அகரமுதல எழுத்தெல்லா
மாதிபகவன் முதற்றே உலகென லாயமைத்த
நீதிஉனை அன்றிநீணிலம் உய்யநெறி ம்ற்றுஉண்டோ
மாதவ!புல்லைத்தலத்தும் என்நெஞ்சத்தும் வாழ்பவனே 1

வான் சிறப்பு(3வது குறள்)

விண்ணன்று விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று டற்றும்பசி யெனலாற்புல்லை யூரின்மழை
வண்ணம்சிறந் தவன்வந்து அருளாவிடில் வாடும்உயிர்த்
தண்ணம் பயிரெனற்கு ஐயமுண்டோ இச்சகதலத்தே 2

நீத்தார் பெருமை(2வது குறள்)

குறைத்தாரென்னாத்துறந்தார் பெருமைதுணைக்கூறின்வையத்
திறந்தாரை எண்ணிக்கொண்டற்று எனலால் இறவாது உனைச்சேர்
துறந்தார்பெருமை அறிந்தும் என்போலிகள் சொல்லவ்ற்றொ
மறந்தார்கள் நீ மறந்தேனுஞ்சொல்லாய்ப்புல்லை வாமனனே

அறன் வலியுறுத்தல்(5வது குறள்)

பொன்னாட்டு இறையோடு அயிராணி போற்றும் அம்போருகப்பூ
மின்னாட்கு நாயகம் என்னும் புல்லாணியில் வீற்றிருக்கும்
அன்னார்க்கு அடியவர் சொல்வர் அழுக்காறு அவா வெகுளி
இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் எனவே

இல் வாழ்க்கை (10வது குறள்)

மையற்ற__வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுமென்பர்___புல்லைத் திருநகர்வா
ழையற் கடிமைப்பட்டு இல்வாழ்க்கை நீதி அமைந்தவரை
மெய்மைக் கருத்துறச்சொல்வது அன்றோவந்த மேன்மைகளே

## வாழ்க்கைத்துணை நலம்(4வது குறள்)

தருந்தக்க நாண்மடம் அச்சம்பயிர்ப்புத் தரித்த பெண்ணிற்
பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்
பொருந்தச்சொல்லத்தன்மை புல்லைப்பிரான் திருவடிபூவடியை
வருந்தி தவம்புரிமாதர் கற்பல்லது மற்றில்லையே

## புதல்வரைப்பெறுதல்(5வது குறள்)

வாட்டமின் மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்சொற்
கேட்டல் இன்பம் செவிக்கு என்றனர் தேவகித்தாய்க்குத்தந்தை
ஏட்டலர்த்தார் வசுதேவனுக்கு இன்புற்று இருமைஇன்பம்
காட்டவந்தான் இந்தக்காசினிக்கே புல்லைக்காகுத்தனே

## அன்புடமை( 5வது குறள்)

வற்றாத அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்துஇன்
புற்றார் எய்தும்சிறப்பு என்பதுகாண் இவுலகுதனில்
கற்றார் உனதுன்பர்க்கு அல்லாமல்வஞ்சக்கயவர்க்கு என்று
சற்றாகிலும் உரையார் புல்லைவாழும் தனிக்கொண்டலே

## விருந்தோம்பல்(10வது குறள்)

மூக்கிற்கு மோப்பக்குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக்குழையும் விருந்து என்பராற்சென்று நூற்றுவர்பா
*லேக்குற் றிடாது விதுரன் மனைவிருந்து என்னநின்றான்
காக்கத் தனிப்பொருளானான் புல்லாணியிற்கார் வண்ணனே

(ஏக்குற்றிடாது =விரும்ப நிற்காமல்)

## செய்நன்றி அறிதல்(4வது குறள்)

உள்ளு --- தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர்பயன் தெரிவார் எனலால் இக்குவலயத்தில்
விள்ளொருபோதொரு போதுஎடுத் தேத்தமிகவெனக்கொண்
டள்ளலம் போருகன் மேற்பதம் புல்லைஅரிநல்குமே

**நடுவு நிலைமை (8வது குறள்)**

தேடாது புல்லையில் வந்தாய் என்சிந்தையில்சேர்ந்துவிளை
யாடாய் **சமன்செய்து சீர்தூக்கும்கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கணி** எநலான் அடுக்கூறி நின்றாள்
வாடாமலரின்கண் நீடூழியான்பிக்கு வாழ்வதற்கே

**அடக்கமுடைமை(1வது குறள்)**

கமலமின வாழ்வுடையோர் புல்லைமாநகரீர் **அடக்கம்**
**அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்**
உமதடிபெற் றடங்குற் றோரமரருள் உய்ப்பர்மைக்கூற்
றெமதடி பெற்றடங்கார் இருள்சேர்வர் எனச்சொல்வனே

ஒழுக்கமுடமை(1வது குறள்)

பழுக்கும் பழமொழி பா**ரொழுக்கம் விழுப்பம் தரலால்**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**என்று உரைப்பர்நெஞ்சே
செழிக்கும் திருப்புல்லைமால் பதத்தன்பிற் றிருந்துவையேல்
இழுக்கமில்லாமை ஒழுக்கம் விழுப்பமெல்லாம் தருமே

பிறனில் விழையாமை(5வது குறள்)

எய்தமன்கணை தாங்காது **எளிதென இல்லிறப்பான்**
**எய்துமெஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி**எனலான்
மைதவழ் மேனியன் புல்லைஎம்மாயன் மலரடிக்கீழ்
உய்திறஞ்சேர்பவர் சேரார் பிறரில்லுறும்பழியே.

பொறையுடைமை(5வது குறள்)

ஆவிக்கொடியவராய் **ஒறுத்தாரை ஒன்றாக வையா**
**ரேவைப்பரே பொறுத்தாரைப்பொன்போற் பொதிந்து** என்னப்புல்லைத்
தேவப்பொறையினன் றெவ்வை வையாதிங் கொருபொருளாய்ப்
பூவிற்பொன்போற் பொதிந்தேவைப்பன வாழப்பொறைமின்னையே

அழுக்காறாமை(5வது குறள்)

அழுக்ககலா **அழுக்காறுடையார்க் கதுசாலுமொன்னார்**
**வழுக்கியுங் கேடீன்பது** வெனலாலென் மனத்தழுக்காற்
றிழுக்கறுதற்கு னிணையடி ஏத்தி இறைஞ்சுதற்கு
முழுக்கெதியெய்துதற்கு என்றோதினம் புல்லைமுன்னவனே

வெஃகாமை(2வது குறள்)

பையாய் நிறைபொன்**படுபயன் வெஃகிப்பழிபடுவ**
**செய்யார் நடுவன்மை நாணுபவரெ**னச் செப்பினரான்
மெய்யார் பயனென்றுனைக் கொள்வர் வேறொன்றை வெஃகுவரோ
மையார்கண் மாமங்கை மார்பா தென்புல்லையில் வாழ விண்டுவே

புறங்கூறாமை(4வது குறள்)

சொற்கிசைவா மெனக்**கண்ணின்று கண்ணறச்சொல்லினுஞ்சொல்**
**லற்க முன்னின்று பின்னோக்காச்சொலெ**ன் பரறிவுடையோர்
கற்கி உருவெடுத்தோன் புல்லைமால் கமலச்சரண
மெற்கெனக்கூறிப் புறங்கூறிடாமலிருப்ப தென்றே

பயனில் சொல்லாமை(6வது குறள்)

நட்படியார்க்கருள் புல்லைப்பிரான் றிருநாம மனத்
துட்பயனீதென்றுரையாத மாந்தரையோ கடல்சூழ்
மட்கட் **பயனில்சொற் பாராட்டுவானை மகனெனல் மக்**
**கட்பதடியெனலெ**ன்றோத வள்ளுவர் காட்டியதே

தீவினையச்சம்(3வது குறள்)

சீர்க்குள்**அறிவினுளெல்லாம் தலைஎன்ப தீயசெறு**
**வார்க்குஞ் செய்யாவிடல்** என்றதனாற்கொல் கொல்வாளரக்கன்
போர்க்கு மெலிதல் கண்டே நாளைவாவின்று போவெனவிப்
பார்க்குளு ரைத்ததென் சொல்வேன் புல்லாணிப்பதியண்ணலே

ஒப்புரவறிதல்(8வது குறள்)

தொல்காசினியி **லிடனில் பருவத்து மொப்புரவிற்**
**கொல்கார் கடனறி காட்சி யவ**ரெனலோர் தருமன்
செல்கானி னூற்றுவர் சொல் கோதினாற் றவர்சீரமுது
நல்காயென நல்கினான் புல்லைமால ரூணன்மைபெற்றே

ஈகை (4வது குறள்)

கரந் திலராயளிப்பார்க்கு **மின்னாதி ரக்கப்படுத**
**லிரந் தவரின் முகங்காணு மளவெ**ன்றியம் புதலால்
வரந் தரவேண்டு மென்றுன்பாற் சொல்லேனை வலியவந்தாள்
புரந் தரன்பூசிக்கும் புல்லையில் வாழுந்திபூத்தவனே

புகழ் (4வது குறள்)

போத **நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப் போற்**
**றாதுபுத் தேளுலகு** என்றார் புவிக்கணருள் செயலா
லொதுபுகழ் கண்டயன் போற்றும் த்வ்ன்புல்லாய யூரனைச்சென்
றேதமில்லாது புத்தேளுலகேத்தலியல்வதுவே

அருளுடைமை (1வது குறள்)

வம்பூடிலா **வருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்**
**வம் பூரியார் கண்ணுமுள**வென்றொதினர் மன்னிய செல்
வம்பூதலத் துன்னருட் செல்வமல்லது மற்றுமுண்டோ
வம்பூதிய மலரோன் றந்தையே புல்லைமாநிதியே

புலான் மறுத்தல்(5வது குறள்)

உண்ணமு(தும்) பர்க்கு தவுபுல்லாணி யொருவனந்நா
ளுண்ணவனித் தலத்**துண்ணாமை யுள்ளதுயிர் நிலையூ**
**னுண்ணவண்ணாத்தல் செய்யாதள றெ**ன்றறிந்தோர் நரகி
லுண்ணலியாருல குண்ட பெம்மான ருளுண்மையுற்றே

தவம்(7வது குறள்)

தளிவிடு மோவன்றிப் புல்லைக்கரசு த்யைவெள்ளத்தோர்
துளிவிடு மோவறியேன் வன்னி **சுடச்சுடரும் பொன்போ**
**லொளி விடுந்துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்**கொப்பதாய்
வெளிவிடு மாதவஞ் செய்யேற்கையோ புகல்வேறில்லையே

கூடாவொழுக்கம்(1வது குறள்)

வேதங்கள் காணவுமெட்டா னெழுத்து விளங்குமெட்டான்
சீதங்களார் மலர்ச் செல்விக்கு வாய்த்த திருப்புல்லையான்
பாதங்கள் சேர்ந்துய்க **வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்**
**பூதங்க ளஞ்சு மகத்தே நகும்**எனும் புன்மையற்றே

கள்ளாமை(6வது குறள்)

காற்றார் பொழில் புல்லை மாலே **அளவின் கணின்றொழுக**
**லாற்றார் களவின்கட் கன்றிய காதலவரென**லா
னேற்றா னயனதள வின்கணின்றனை வெண்ணெயுண்டல்
சாற்றாய் களவின்கட் காதலுன் விந்தையச் சாற்றுவதே

வாய்மை(2வது குறள்)

தாய்மலர்மங்கை தழைத்த புல்லாணிவந்தாய் **பொய்மையும்**
**வாய்மையிடத்த புரைதீர்ந்தநன்மை பயக்குமெனின்**
தூய்மனமெய்ந்நன்மையாதேனுமின்றிச் சொலும் பொய்மை
யனாய் மெலிந்தேனை மெய்யாளாக்கினி யுன்னடியிணைக்கே

வெகுளாமை (4வது குறள்)

நஞ்சினத்திற் கொடிதாக **நகையும் உவகையும் கொல்**
**லுஞ்சினத்திற் பகையும் முளவோ பிற**வென்றுரைத்த
வெஞ்சினத்தீமையெனை மேவிடாதுனை வேண்டினேன்மெய்
மஞ்சினத்தா புல்லைவந்தாய் சுகாநந்த வாரிதியே

இன்னா செய்யாமை(8வது குறள்)

அன்னவன் **தன்னுயிர்க்கு இன்னாமைதானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க்கு இன்னாசெயலெ**ன்ற வள்ளுவர் வாய்மைகண்டும்
பின்னும்பிறருக்கின்னாமை செய்பேதை யிருளகலப்
பொன்னூறு சோதியைக் கண்டுகொண்டேன் திருப்புல்லையிலே

கொல்லாமை(4வது குறள்)

ஆதியருந் தமிழ் வள்ளுவ**னல்லா றெனப்படுவ**
**தியாதெனின் யாதொன்றுங் கொல்லாமை சூழுநெறி**யெனலா
லோது முயிரைக் கொல்லாமை நல்லூற் றுனதுதிருப்
பாதமலர்ப்பணியான் செய்வனோ புல்லைப் பார்த்திபனே

நிலையாமை(6வது குறள்)

ஒன்றில்லை யுன்செயலல்லா **னெருநலுள னொருவன்**
**இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு**தனிற்
கொன்றில்லை யென்னுங்கொலை பொயுள்ளேன் புல்லைக்கோவெனையா
ணன்றில்லை யாயினிலையில்லை யாளினரகில்லையே

துறவு(6வது குறள்)

நானோக்கி நின்செயனின் பொருள்என்ன மெய்நல்கு புல்லைச்
சேனோக்கி மாநண்ப **யானென தென்னுஞ் செறுக்கறுப்பான்**
**வானோர்க் குயர்ந்த வுலகம் புகுமெ**ன்று வையகத்து
ளானோர்க்கு வள்ளுவர் மேனாளுரைத்த னரன்பு வைத்தே

மெய்யுணர்வு(8வது குறள்)

கருவார் **பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்செம்**
**பொருள் காண்பதறிவு** என்றோ தினராற்றிருப்புல்லை நக
ரருண்மால் சிறப்பு என்னும் செம்பொருள் வாழ்வுடைத்தாதலினால்
வருபேரறிஞர் கண்டேழ்பிறவி புன்மை மாற்றுவரே.

அவா அறுத்தல்(9வது குறள்)

தென்னம் புவியகத் **தின்ப மிடையறா தீண்டுமவா**
**வென்னுந் துன்பத்துட்டுன் பங்கெடின்** என்ன விசைத்துமுன்னோர்
பொன்னின் பெண்மண் முதலாசையுட் சிக்கிப்புலம்பிநொந்தேன்
பின்னின் றெனைப்புரப் பாரில்லை புல்லைப் பெருந்தகையே.

ஊழ்(3வது குறள்)

பற்றின் கருத்தின்படி **நுண்ணியநூல் பலகற்பினு**
**மற்றுந் தன்னுண்மை யறிவேமிகுமெனின்** மாந்தரெல்லாங்
கற்றிங்கிருக்கினு முண்மையறிவுனைக் காண்பதன்றி
முற்றும் பொருளினியுண்டோ புல்லாணி முகில்வண்ணனே